# போர்வாள்

...ரியர்கள்: காஞ்சி. மணிமொழியார் ...மா. இளஞ்செழியன், B. A. (Hons.)

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

...ள் 1 | சென்னை 1—11—47 சனிக்கிழமை | வீச்சு 12


# நாம் கேட்கும் திராவிடநாடு!

1. நாம் கேட்கும் திராவிடநாடு நம்மை சுதந்தரத்திற்கு — பூரண சுயேச்சைக்கு—பரிபூரண விடுதலைக்குக் கொண்டுபோய்விடும்.

2. சென்னை மாகாணம் தான் இன்று திராவிட நாட்டு விஸ்தீரண அளவு.

3. மற்ற மாகாணத்தவர் திராவிட நாட்டிற்குள் காலடி வைப்பதானால் திராவிட அரசாங்கத்தின் அனுமதிச் சீட்டு (Pass Port) வாங்கிக்கொண்டுதான் வர வேண்டும்.

4. மற்ற மாகாணச் சரக்கு சுங்கம் கொடுத்துவிட்டு அதுவும் திராவிடம் அனுமதித்தால் தான் திராவிட நாட்டிற்குள் வர வேண்டும்.

5. வெளிநாட்டார் இங்கு வர்த்தகம் கைத்தொழில் செய்வதும் நம் நாட்டு சௌகர்யத்தையும் தேவையையும் பொறுத்ததாகும்.

6. திராவிட நாட்டிலுள்ள முஸ்லிம்கள் ஆதித் திராவிடர்கள் கிறிஸ்தவர்கள் பவுத்தர்கள் ஆகியோரும் திராவிடரே. ஆனதால் அவரவர்கள் சமயம், ஆத்மார்த்தம் என்பவற்றின் உணர்ச்சி இன்றுள்ளது போலவே அவரவர்கள் இஷ்டப்படி இருக்கும்.

7. ஆரியர்கள் நிலையும் அதுபோலவே மற்றவர்களுக்கு அவர்களால் கேடும் இழிவும் நட்டமும் இருப்பதற்கு இல்லாத நிலையில் சம உரிமையோடு இருக்கும்.

—பெரியார் ஈ. வெ. ரா.

# இனாம்—ஜமீன் இரண்டும் தொலைக!

## சென்னையில் தமிழக இனாம் உழவர் மாநாடு.

"இன்று சட்டசபையில்
...மீன் ஒழிப்பு மசோதா
...இருக்கிறது. இதை
...தாச்சாரிகளும் பாஷ்யம்
...யங்கார்களும் வைத்
...நாதய்யர்களும் எதிர்க்
...ர்கள். அல்லாடி
...ஷ்ணசாமி அய்யர்கள்
...ரிய பெரிய சட்டப் புத்த
...களைத் தூக்கிக்கொண்டு
...து போட்டு சட்டப்
...ச்சினைகளைக் கிளப்பி
...சோதாவை மடக்கப்
...ர்க்கிறார்கள். ஆனால்
...ன் முதலில் ஜமீன்
...யும் இனாம்களையும்
...ரோடும் வேரடி மண்
...டும் எடுத்து எறிய
...ண்டும் என்று 1933
...யே கோஷமிட்டவர்
—அதற்காக அந்தக்
...த்திலேயே ஜமீன்தார்
...தார் மாநாடு நடத்தி
...கள் தோழர் ஈ. வெ.
...ம் மற்றவர்களும்
... அவர்கள் இன்று
சட்டசபையில் இல்லை, ஆனால் மசோதா இருக்கிறது."

—இதைக் கடலோசையென எழுந்த கைதட்டுதலுக்கிடையே எடுத்துச் சொன்னவர் தளபதி அண்ணாதுரையல்ல — தோழர் ஜீவானந்தம். தன்மான இயக்கத்தில் — ஆம், பகுத்தறிவுப் பாசறையில் அன்றோர் நாள் வீரத் தளபதியென விளங்கிய நண்பர் ஜீவாநந்தம்தான் இதை எடுத்துக் கூறினார் சென்ற கிழமை சென்னை புரசவாக்கம் முத்தையா செட்டி பள்ளி மைதானத்தில் நடைபெற்ற தமிழ்நாடு இனாம் உழவர் மாநாட்டில்.

"கோயில் பெருச்சாளிகள் கொக்கரிக்கட்டும்; மடத்துத் தம்பிரான்கள் முணுமுணுக்கட்டும்; அல்லாடிகளும் சாஸ்திரிகளும் ஆர்ப்பரிக்கட்டும்; அமைச்சர் கூட்டம் தலை குனிந்து கிடக்கட்டும், அக்கிர

காரம் இது அடுக்குமா என்று ஆரவாரம் செய்யட்டும். எது நடப்பினும் நடக்கட்டும்; இனாம்களும் ஜமீன்களுடன் சேர்ந்து ஒழிவதே முறை'' என்று இந்த மாநாடு ஒரே குரலில் முழக்கம் எழுப்பிற்று.

காங்கிரஸ், கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம் — மூன்று திறத்தாரும் அங்கே கூடியிருந்தனர் தத்தம் வேற்றுமைகளை மறந்து, ஒருவர்க்கு ஒருவர் கை குலுக்கினர்; இனாம் ஜமீன் இரண்டும் ஒழிக என்று இடியென முழங்கினர். காங்கிரஸ் பக்கம் ம. பொ. சிவஞானம், கம்யூனிஸ்ட் பக்கம் ப. ஜீவானந்தம், திராவிடக்கழகத்தவர் பக்கம் சி. என். அண்ணாதுரை மூவரும் மேடைமீது. சுற்றிலும் வெள்ளம் போல் தமிழர் கூட்டம்; இனாம் ஜமீன் முதலிய பிற்போக்குச் சக்திகளை ஒழித்துக் கட்டுவோம் என்று முரசறையும் கூட்டம். இந்த அழகிய காட்சி அன்று.

முதலில் மாநாடு பள்ளி மண்டபத்தில் கூடியது. ரிவின்யூ அமைச்சர் காளா வெங்கட்ராவ் —ஜமீன் ஒழிப்பு மசோதாவைச் சட்ட மன்றத்தில் கொண்டு வந்தவர் 'மாநாட்டைத் திறந்து வைத்தார். "பிற்போக்கு மந்திரிசபை என்று சொல்லப்பட்ட பொப்பிலி ராஜா மந்திரி சபையே இனாம் குடிகளுக்குக் குடிவார உரிமை கொடுத்திருக்கிறது என்றால் அதைவிட மிக முற்போக்கான மந்திரி சபை என்று சொல்லிக் கொள்கிற இன்றைய அமைச்சர் அவை ஜமீன்களைக்கூட ஒழிக்காவிட்டால் நன்றாயிருக்குமா'' என்று அவர் கேட்டார் தன் சொற்பொழிவில். அவர் மட்டுமா, அங்குக் கூடியிருந்த அந்த மாபெருங் கூட்டமே அதைத் தான் கேட்டது. தர்ம இனாம்களைக்கூட விலக்கும் பிரச்சினை தற்போது இல்லை. எல்லா இனாம்களையும் ஜமீன் ஒழிப்பு மசோதாவில் சேர்ப்பதென்றே நாங்கள் முடிவு செய்திருக்கிறோம் என்று மக்கள் மகிழ்ச்சிக்கு இடையே காளா வெங்கட்ராவ் அறிவித்தார்.

அமைச்சர் காளா வெங்கட்ராவ் பேசி முடிப்பதற்குள் கூட்டம் மண்டபம் முழுதும் நிறைந்து வெளியே மைதானத்தில் எல்லாம் நாலா பக்கங்களிலும் நிறைந்துவிட்டது. எனவே மாநாடு, கூடி இருந்த மக்கள் விருப்பத்திற்கிணங்க, மண்டபத்தில் இருந்து மைதானத்திற்கு மாற்றப்பட்டது. பிறகு, தோழர் ம. பொ. சிவஞானம் தலைமை தாங்கி மடாதிபதிகளின் மமதையையும், இனாம்கள் ஏன் தொலையவேண்டும் என்பதையும், கடவுள் பேரால் நடக்கும் கொடுமைகளையும் சித்தரித்துக் காட்டினார் தன் உரையில்.

பிறகு, ஜீவானந்தம் சொற்பொழிவு. அன்று பேசியது 1947-ம் வருஷத்து ஜீவானந்தம் அல்ல. 1933-ம் வருஷத்து ஜீவானந்தம்—பழைய ஜீவானந்தம்; சுயமரியாதை ஜீவானந்தம். "ஏ கோயில் பெருச்சாளிகளே! இனாம்கள் ஒழிந்துபோனால் நாடெங்கும் திராவிடக் கழகங்கள் பெருத்துப் போமே என்று அலறுகிறீர்களா? அதற்காக உங்களை நாங்கள் விட்டுவைக்க மாட்டோம். ஒழித்தே தீருவோம்'' என்று உரத்த குரலில் அவருக்கு இயல்பான அந்த முரட்டு வார்த்தைகளில் ஜீவானந்தம் கூறியதைக் கேட்டிருந்தால் ஆரியம் கட்டாயம் அலறித்தான் இருக்கும். தோழர் ஈ. வெ. ரா. என்று சொல்லிக் கொண்டே வந்த ஜீவானந்தம் ஒரு முறை தன்னை மறந்து பெரியார் என்றே சொல்லிவிட்டார். இனாம் மசோதாவைக் கட்டுப்பாடாக

எதிர்க்கும் பிராமணீயத்தின்
அவ்வளவு ஆத்திரம் அவ
அன்று.

கடைசியாக அறிஞர் அண்
துரை பேசுகையில், "நண்
சிவஞானமும் தோழர் ஜீவா
மும் பேசிய பேச்சுகள் (திரா
மேடைகளில்) நாம் அடிக்
கேட்டுக் கேட்டு பழக்கப்ப
னவே என்றாலும் இன்று இ
இவர்கள் இவற்றைப் பே
கேட்ட நான் ஒரு புது ம
னாகிவிட்டேன்.'' என்று கு
பிட்டார். "நண்பர் ஜீ
நந்தத்தை இழந்துவிட்டோ
என்று எண்ணியிருந்த ஏ
தைப் போக்கி, என்றை
இருந்தாலும் ஜீவானந்தத்தை
இழக்க முடியாது; ஜீவா
மும் தான் (முன்பு) கற்ற
யங்களை இழக்க முடியாது எ
பதை அவருடைய பே
காட்டிவிட்டது'' என்று சொ
விட்டு, இன்றைக்கு இ
ஒழிப்பைப் பற்றி இவ்வ
தாராளமாகப் பேச முடிகி
என்றால் அதற்குக் காரணம்
மரியாதைக்காரன் பல ஆண்
ளாக எவ்வளவோ எதிர்ப்
கிடையே செய்து வந்த ப
தான் என்பதை அழகாக,
மையாக, அவருடைய அந்த
பீரமான குரலில் அண்ணா
துரைத்தார்.

தமிழகம் புதுப் பாதை
தான் செல்கிறது, நைந்துபே
பழம் பாதையில் அல்ல.
சீர்திருத்தம் என்றால்
போல் அஞ்சவில்லை. சுயம
தைக்காரன் நாட்டிலே தூ
புரட்சி வித்து நல்ல பலன்
டுக்கத் தொடங்கி இருக்கி
என்று மாநாட்டுக்கு வந்த
ளிற் பலர் பேசிக் கொண்டு தி
பிச் சென்றதில் வியப்புக்கு
ஒன்றுமில்லை.

**தொலையட்டும் ஜமீன்கள்! ஒழி
டும் இனாம்கள்!**

சியல் அரங்கம் :

# திராவிடம் தேய்ந்தது பிரிட்டானியத்தால் மட்டுமா?

## வடநாட்டுச் சுரண்டலை மறப்பது ஏனோ?

### கம்யூனிஸ்டுக்குத் திராவிடக் கழகத்தவர் கேள்வி

[திராவிடப் பிரிவினை தேவையில்லை என்ற கருத்தில் கம்யூனிஸ்ட் தோழர் தீட்டிய கருத்துரைக்குத் திராவிடக் கழக நண்பர் ஒருவர் எழுதிய மறுப்புரையின் ஒரு பகுதி சென்ற இதழில் வெளிவந்தது. அதன் மறுபகுதி இது:]

திராவிடநாட்டுப் பிரிவினை முழக் வெறும் பண்டைய நாகரிகத் ர அடிப்படையிலோ, சமயம் வம் பற்றுக் கோட்டின் துணை ரண்டோ, எழுப்பப் பட்டதல்ல பதைச் சென்ற இதழில் விளக் னன். கம்யூனிஸ்ட் நண்பர் ிய வெடிகுண்டின் பிற ஈயத் ண்டுகளை இந்த இதழில் உங்கள் ன் நிறுத்துவதாகவும் குறிப்பிட் ந்தேன். இதோ, உங்கள்முன், வொன்ருக வைக்கிறேன் அவை ா, நீங்கள் பார்க்க, பார்த்துச் திக்க, சிந்தித்து ஒரு முடிவுக்கு

**தென்னுட்டில் இருப்பது ஓர் இன ல; தமிழ் ஆந்திரம் கன்னடம் ளம் என்ற நான்கு இனங்கள்.**

ண்மை! தென்னுட்டில் தமிழர் திரர் கன்னடர் கேரளத்தர் ற நான்கு கூட்டத்தவர்— ்கு வகைப்பட்ட மக்கள்— வேறு பிரிவினர் உள்ளனர், வரும் நால்வேறு மொழிகளைப் சுபவர்கள். தத்தமக் கென்று த் தரணி உடையவர்கள். சிற பழக்க வழக்கங்களிலும் நொடி பாவனைகளிலும் குணங் சாயல்களிலும் கூட கொஞ் கொஞ்சம் வேற்றுமை இந் வருக்குள்ளும் உண்டு. உண்டு ஆனல் அதனலேயே இவர் நால் ம் நான்கு தனித்தனி இனத்தவர் என்று கொள்ளல் முறை அன்று. மொழி—அதனல் ஏற்படும் ஒரு சில வேற்றுமைக் குறிகள் இவற்ருல் **மட்டுமே** ஒரு தனி இனம் அமைவது என்பது இனநூல் உண்மைக்கே மாருனது. ஏனெனில், இதே கம்யூனிஸ்ட் தோழர் மற்ருேரிடத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல ஒரே மொழியைப் பேசும் நார்வே மக்களும் டென்மார்க்கு மக்களும் தனித்தனி இனங்களாக உள்ளனர். இதுவே போன்று ஒருமொழி பேசும் ஜர்மானியரும் ஆஸ்திரியரும் வெவ்வேறு இனங்களாகவே உள்ளனர். இவை மட்டுமே அல்ல. பலமொழிகள் பேசும் ஸ்விஸ் நாட்டவர் ஒரே இனத்தவராக ஒரே நாட்டில் ஒரே ஆட்சியில் இருப்பதையும் நாம் காண்கிருேம். ஆகவே, எது இனம் அல்லது யார் ஓர் இனத்தவர் என்று முடிவு கட்டுவதற்கு மொழி **மட்டுமே** அல்ல அடிப்படை. இந்த உண்மையை நெஞ்சில் நிறுத்திக் கொண்டு தென்னுட்டுப் பிரச்சினைகளை அலசிப் பார்த்தால் தமிழர் தெலுங்கர் மலையாளியர் கன்னடர் நால்வரும் நான்கு இனத்தவர் அல்ல—ஒரே இனத்தின் நான்கு கிளையினர் என்பது வெள்ளிடைமலையென விளங்கும். "அப்படியானல்திராவிடத்தம்பி,இவர் நால்வர்க்குள்ளும் வேற்றுமை இல்லையோ? கண்ணெதிரில் காணும் உண்மையைக் கருப்பு எழுத்தில் மறைக்கும் குணம் எதற்கோ? இது முறையோ? நேர்மையாளன் என்று உன்னை நான் எண்ணினேனே, கடைசியில் இத் தன்மையதுதானு உன் போக்கு" என்று பொதுவுடைமைத் தோழர் சற்று அவசர அவசரமாகவே வார்த்தைகளை எடுத்து வீசக்கூடும். ஆனல் நான் தமிழர் தெலுங்கர் மலையாளியர் கன்னடர் நால்வருக்கும் இடையே சிற்சில வேறுபாடுகள் உண்டு என்பதையும் மறைக்கவில்லை. அந்த வேறுபாடுகள் இருப்பதாலேயே அவர்கள் தனித்தனி இனத்தவர் என்று சொல்லும் நெஞ்சுத் துணிவும் எனக்கில்லை.

இந்த நால்வருக்கிடையே வேறுபாடு இருக்கிறது, நிச்சயமாக இருக்கிறது. ஆனல் இந்த வேறுபாடு பிரிட்டானியர் என்ற ஒரே இனத்தினர் ஆங்கிலேயர், வேல்ஷ் மக்கள், ஸ்காட்டிஷ் மக்கள், ஐரிஷ் மக்கள் என்று நான்கு பிரிவினராக உள்ளனரே, அதுபோன்ற வேறுபாடு. மொழி வேறுபாடும் ஏறத்தாழ ஆங்கிலம், ஐரிஷ், வெல்ஷ், ஸ்காட்டிஷ் மொழிகளுக்கிடையே உள்ள வேற்றுமை போன்றதுதான்.

ஆனல் வடநாட்டவர்க்கும் தென்னுட்டவர்க்கும் உள்ள வேறுபாடும், ஆரியர்க்கும் திராவிடர்க்கும் உள்ள

# பெரு மீன் சிறுமீனை ஏன் விழுங்காது ?

வேறுபாடும் ஜர்மானியர்க்கும் ஜப்பானியர்க்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் போன்றது.

**4. வடநாட்டுச் சுரண்டல் என்பது வெறும் கற்பனை. இந்தியர் அனைவருமே ஏகாதிபத்தியத்தின் பிசாசுப் பிடியில் திணறிக் கொண்டிருந்த போது, ஒருவரை ஒருவர் சுரண்டுவது எங்கே? எவ்வாறு முடியும்? தென்னாட்டின் சீரழிவுக்குக் காரணம் வடநாட்டவனு? இல்லை, இல்லை. ஏகாதிபத்தியம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடி. ஏகாதிபத்தியத்தின் பேராசைக் கொள்கை.**

—இது என் சொந்தச் சரக்கல்ல; கம்யூனிஸ்டு நண்பரின் எழுத்துச் சித்திரம்; திராவிடப் பிரிவினை வேண்டாம் என்பதற்கான அற்புதமான வாதம்; தென்னாட்டில் தனித்தரணி அமைவது தேவையில்லை என்ற பேருண்மையை நிலை நாட்ட எழுந்த மிக வியப்பிற்குரிய சொற்களின் தொகுப்பு.

**• வடநாட்டுச் சுரண்டல் வெறுங் கற்பனை!** நினைத்து நினைத்துப் பார்க்கிறேன் நானுந்தான், இந்த வாசகத்தை என் மதிப்பிற்குரிய நண்பர் எதற்காக எடுத்து வீசினார் என்பது எனக்குப் புரியவே இல்லை.

நாள்தோறும் படிக்கிறோம் தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், ஆந்திர பிரபா பத்திரிகைகளை. இவை மூன்றும் வடநாட்டு மார்வாடியின் உடைமை என்பது நமக்குத் தெரியும் நன்றாக. அவர் பெயர் ஸ்ரீ ஜத் கொயங்கா என்பதும் நாம் அறிவோம் நீண்ட நாட்களாக. ஆனாலும் கம்யூனிஸ்ட் கூறுகிறார் இது கற்பனை என்று. எது கற்பனை? தினமணி பத்திரிகை கற்பனையா? அதை நடத்தும் கொயங்கா கற்பனையா? அவருடைய அந்த இதழை வாங்கிப் படிக்கும் நீங்களும் நானும் கற்பனையா? எது கற்பனை?

கம்யூனிஸ்டு தோழரே கூறுகிறார் திருச்சியிலே தால்மியா நகர் இருக்கிறதென்று! தால்மியா நகர் கற்பனையா?

அவரே சொல்கிறார் நாகையிலே டாடாவின் இரும்பு ஆலை இருக்கிறது; மலையாளத்தில் டாடா எண்ணெய் ஆலை இருக்கிறது; விண்ணிலே வட்டமிட டாடா ஏர்லைன் (Tata Airline) இருக்கிறது என்றெல்லாம். இந்த ஆலைகளும் வானூர்திகளும் கற்பனையா? அல்லது இவற்றிற்குரிய அந்த டாடா கற்பனையா?

சென்னையிலே இருக்கிறது — சௌகார் பேட்டை அது கற்பனையா, அங்கு திண்டு தலையணை வசம் காட்சியளிக்கும் மார்வாடி குஜராத்தி பண மூட்டைகள் கற்பனையா, அவர்கள் எதிரில் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் ஏழைத் திராவிடர்கள் கற்பனையா, நூற்றுக்கு நூறு வட்டி வாங்கி அதன் பேரில் ஐந்து ரூபா கடன் கொடுத்து, ஐந்து, ஐம்பதாகி, ஐம்பது ஐந்நூறாகிட, அதை அடைக்கும் வழியற்ற ஏழைத் தமிழனின் பித்தளைப் பாத்திரங்கள் மார்வாடி கடைக்கு "மயானத்துப் பயணம்" செய்கின்றனவே, அது கற்பனையா? அல்லது இந்தக் கோரக் காட்சியைக் கண்டு, தன் வாழ்விலே இடி விழுந்ததென எண்ணி நடுங்கும் அந்தப் பாட்டாளித் திராவிடனின் குமுறும் உள்ளம், நீர் உகுக்கும் கண்கள், அது வீழும். கன்னம், உலர்ந்த உதடு, உணவறியா வயிறு, ஒடிந்த குச்சி போன்ற கால்கள், அவை அனைய கைகள், இந் நிலையை நினைத்து, நினைத்து உள்ளம் ஒடிந்து வீழும் அவன் மனைவி, மனைவியிடம் அடிபட்டு அவதியுறும் சிறு குழந்தை, இந்தப் பரிதாபக் காட்சியைக் கண்டு கண்டு சலித்துப்போன அந்த ஓட்டைக் குடிசை, அதன் மீதுள்ள மார்வாடியின் வாரண்டு- இவற்றிலே எது பொய்? எது கற்பனை? எது திராவிடக் கழகம் இட்டுக் கட்டிக் கூறுவது? எது உண்மையில் நடவாதது? எது ஊர் அறியாத உண்மை? சொல்லட்டுமே நம் தோழர்.

தென்னாட்டின்மீது டாடாக்களும் பிர்லாக்களும் டால்மியாக்களும் கொயங்காக்களும் வலை வீசி

விட்டனர்—அவர்களுடைய
புப் பிடியில் திராவிடம்
விட்டது; அது முழுதும் சி
முன்னர் அதை விடுவிக்கவே
—அதற்கான விடுதலைப்போ
வேண்டும் என்கிறது திரா
கழகம். வட நாட்டு வலை
அது வெறும் கற்பனை என்
தோழர் கம்யூனிஸ்ட். நியா
இப்படிச் சொல்வது முறை
முறையோ அல்லவோ உண்மை
நெஞ்சில் கை வைத்துப்
கூறட்டும், வடநாட்டுச் சுர
என்பது வெறும் கற்பனையா,
லது நேரில் நாம் காணும் வே
யின் உருவமா என்பதை.

இந்திய மக்கள் அனை
பலம் பொருந்திய பிரிட்டிஷ்
பத்தியத்தின் பிசாசுப்
திணறிக்கொண்டிருந்தபோது
வரை ஒருவர் சுரண்டுவது
முடியும் — தென்னாட்டுச் சி
குக் காரணம் வடநாடு அல்ல
டிஷ் ஏகாதிபத்தியம் என்
நண்பர்.

இதுவும் தவறு. தென்
சிதைவுக்குக் காரணம் பி
ஏகாதிபத்தியம் மட்டுமே
வடநாட்டுச் சுரண்டலும்
தான். இரண்டும்தான் கா
இரண்டில் ஒன்று மட்டும் அ

நாம் அனைவருமே பி
ஏகாதிபத்தியத்தால் சுர
பட்டபோது நம்மில் ஒ
ஒருவர் சுரண்டுவது இயலு
கிறாரே தோழர், ஏன் இப
பெருமீன் சிறுமீனை விழு
சிறு மீன் குட்டிமீனை வி
கண்டதில்லையோ அவர்?
தில்லை யாயின் தயவு செய்
கேனும் உள்ள ஏரிக் கரை
செல்லட்டும், இந்தக் கா
காணட்டும், கண்டுவிட்டுச்
லட்டும் பிரிட்டன் இந்திய
சுரண்டிக்கொண்டிருந்த
வடநாடு தென்னாட்டைச் ச
துவங்கியது மெய்தானா இ
என்பதை.

ஆம்! பிரிட்டிஷ் ஏகாதி
நம்மைச் சுரண்டிற்று; நம்
களை நசுக்கிற்று; நமது

# வடநாட்டுச் சுரண்டல் இல்லாத ஒன்று?

தலைக் கொண்டுபோய் இயந்
களில் பண்டங்களாக்கி நம்
டிலேயே கொண்டுவந்து குவித்
சுதேசிக் கப்பல் ஓட்டின
ச் சிறையிலடைத்துச் செக்கி
ச் செய்தது; நம் நாட்டுச் சீர்
புக்களைப் பாடினவனை நாடு
திற்று; தொழில் வளர்ச்சி
றும் என்றவனைத் தடியால்
தது — கம்யூனிஸ்டு தோழர்
பிடும் இவ்வளவும் உண்மை.
ல் உண்மை இந்த அளவோடு
வில்லை. மேலும் கொஞ்சம்
கிறது. பொது எதிரியான
டிஷ் சுரண்டல் ஏகாதிபத்தி
தளர்ச்சி அடைய அடைய
இடத்தில் கொஞ்சம் கொஞ்ச
த் தன் தலையை நுழைத்துவிட்
டாடா — பிர்லா — டால்மியா
—வடநாட்டுச் சுரண்டல்
. நாட்டை நலிவுறச் செய்த
கரமானதோர் உண்மையின்
பகுதியை அழகுபடச் சித்
த நண்பர் அதன் பிற்பகுதியை
த்தது ஏனோ?

ண்பர் குறிப்பிடுகிறார் — அடுக்
காக அமைத்துக் காட்டுகிறார்
ிசை வரிசையாக எடுத்
த்து மொழிகிறார் பிரிட்டிஷ்
திபத்தியத்தை எதிர்த்து இந்
களைக் கண்டம் விளைத்த
ப் போராட்டத்தின் பற்பல
கிகளை; கணக்கற்ற மக்கள்
டிக்கு ஆளானதை: பகத்
கள் தூக்கு மேடைக்கு ஏறி
;வீர மரபிலே வந்த வீர இளஞ்
ங்கள் ஏகாதிபத்தியப் பலி
துக்கு இரையானதை; குமரன்
ம் ஜெபதிகளும் தம் சிறந்த
சியத்துக்குத் தம் ஆருயி
ய அர்ப்பணித்த தியாகச் சிந்
ய. இவற்றை எல்லாம்
ல்லிவிட்டு கொஞ்சம் பெருமை
ு கூறுகிறார் தோழர், "இது
திரம்" என்று. இது சரித்திரம்
. ஆனால் இதே சரித்திரத்தின்
சி அத்தியாயம் ஒன்று இருக்
த அதை ஏன் மறந்துவிட்டார்
?

நாம் அனைவரும் — நண்பர்
வது போல வீர மரபில் தோன்
வீர இளஞ் சிங்கங்கள் அனைவ
போராடினோம் பிரிட்டானி
யத்தை எதிர்த்து—மாஞ்செஸ்டரை, லங்காஷயரை எதிர்த்து. நாம் மாஞ்செஸ்டரை லங்காஷயரை எதிர்த்த வேளையில் அந்த எதிர்ப்பைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு இங்கே பம்பாயும் ஆமதாபாத்தும் வளர்ந்தது. நெப்பிலிடு தயாரிக்கும் நுகர் பொருள்கள் (Consumer goods) இங்கே உலவலாமா என்று நாம் கேட்டோம் கூடாது—இதோ என் பொருள்கள் என்றார் பிர்லா. சீமைச்சரக்கு வேண்டாம் என்றோம் — டில்லிச் சரக்கு வந்தது. பார்த்தோம், பார்க்கிறோம், நாம் அனைவரும்—இந்திய இனத்தவர் அனைவரும் எழுப்பிய தேசியப் போராட்டத்தை வடநாடு தன் சொந்த நலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு, தென்னாட்டை தான் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கும் பணியாள் நிலையில் நிறுத்திவிட்ட கோரத்தை. நெஞ்சு நொந்து கேட்கிறோம் இது அறமா என்று. தவறா?

நாம் கொஞ்சமும் சூது சூழ்ச்சியின்றி பரங்கியர் ஆட்சியைப் பறித்தெறிவதில் கவனஞ் செலுத்தி நின்ற வேளை, வடநாடு மிக மிகச் சாமர்த்தியமான முறையில்—நாம் கவனிக்கவே முடியாத முறையில்—இரகசியமான முறையில் ஆட்சிப் பீடமும் பொருளாதாரப் பிடியும் தன்பால் இருப்பதற்கான எல்லா வித முறைகளையும் கையாண்டு அதில் வெற்றி பெற்றுவிட்டது. உழைத்து அலுத்தும்பலன் காணாத பாட்டாளியானோம் நாம்.

**5. தென்னாட்டு வாணிபப் பிடி வடநாட்டு முதலாளிகள் வசம் சிக்கிக் கொண்டுவிட்டது உண்மை. ஆனால் இதை வைத்துக்கொண்டு வடநாட்டுச் சுரண்டல் தத்துவம் ஒன்று வெளியிடல் சரியா?**

ஏன் சரியில்லை? பிரிட்டிஷ் ஓவர்சீஸ் பாங்கைக் காட்டி ஆங்கில ஏகாதிபத்தியத் தத்துவம் கூறுவது சரியானால், டால்மியா நகரைக் காட்டி, வடநாட்டு ஏகாதிபத்தியத் தத்துவம் கூறுவது எப்படித் தவறாகும்? பக்கிங்காம் கர்னாடிக் மில்லைக் காட்டி பிரிட்டிஷ் சுரண்டலை நிரூபிக்க முடியுமானால், பிர்லாவின் வனஸ்பதி ஆலையைக் காட்டி டில்லி சுரண்டலை ஏன் நிரூபிக்க முடியாது? பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் இருப்பது பரங்கியர் ஆதிக்கத்திற்கு எடுத்துக்காட்டு என்றால் டாடா வான் வழி இருப்பது எதற்கு எடுத்துக் காட்டு?

**6. இனத்தையும் அவ்வின முதலாளித்வத்தையும் ஒன்றெனக் கருதிப் பேசுவது உண்மைக்குப் புறம்பானது. ஏனெனில், அந்தந்த இனங்களிலே, அந்தந்த இன மக்கள் தங்களையும் பிற இனங்களையும் சுரண்டும் முதலாளித்வத்தை எதிர்த்துப் போராடி வருகிறார்கள்.**

இனம் வேறுதான்; சுரண்டும் குழு வேறுதான். வடநாட்டவர் அனைவருமே டாடாக்கள் அல்ல. வடநாடு முழுவதும் பம்பாய் அல்ல. ஒப்புக் கொள்கிறோம் இதனை.

ஒப்புக் கொள்வதானால், நீயும் உன் கழகத்தவரும் பேசும் போதும் எழுதும்போதும், வடநாட்டுச் சுரண்டல் என்று சொல்கிறீர்களே தவிர வடநாட்டு முதலாளிகளின் சுரண்டல் என்று விளக்கிச் சொல்வதில்லையே இது ஏன் என்று கேட்கலாம் கம்யூனிஸ்டுதோழர்.

கேட்பதற்கு முன்பு அவர் நினைவு கூட்டிக் கொள்ளட்டும் இன்று நாம் இருப்பது (நாம் மட்டுமல்ல, இரஷ்யா நீங்கிய மற்ற எல்லா நாடுகளுமே இருப்பது) முதலாளித்வ பொருளாதார அமைப்பில். (Capitalist Economy) சமதர்ம அமைப்பில் அல்ல (Socialist Economy). முதலாளித்வ

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

1—11—47 சனிக்கிழமை

# அவர்கள் நம்மவர்கள்!

"தனியாட்சி மன்னர்களை இழித்தும் பழித்தும் பேசி வந்த காலம் மலையேறிவிட்டது."

"வசைமாரி பொழிந்தும் சுடுசொல் வீசியும் மக்கள் ஆத்திரத்தை அவர்கள் மீது ஏவுதல் இனிக் கூடாது."

"அவர்கள் நம்மவர்கள். அவர்களோடு நமக்கு எத்தகைய தகராறும் இருக்க இடமில்லை."

"நம் அனைவரையும் தன் இருப்புக் காலின் கீழ்போட்டு மிதித்துத் துவைத்து வந்த பிரிட்டிஷ் வல்லரசு நம் நாட்டைவிட்டு நீங்கிய பிறகு இங்குள்ள மன்னர்களும் நாமும் ஒரே குடும்பத்தவர்போல் இருப்பதே முறை."

"மன்னர்களே காலம் மாறுகிறது என்பதை உணர்ந்துகொண்டு தாமாகவே மக்கள் ஆட்சி மலர்வதற்கான வழி வகைகளைச் செய்துவிடுவர். பிறகு நாம் ஏன் வீணுக அவர்கள்மீது காய்ச்சல் கொள்ளவேண்டும்?"

"மக்கள் தலைவர்கள் பொறுப்பாட்சி பெறுவதற்கு முன்னுல் அதற்குத் தாங்கள் தகுதிதான் என்பதை நடைமுறையில் காட்டவேண்டும்."

"மக்கள் சார்பில் நின்று உரிமைப் போர் தொடுக்கும் மாவீரர்களைக் கேட்டுக் கொள்கிறேன், **நீங்கள் மக்களுடைய மதிப்பை மட்டுமல்ல, மன்னர்களின் நம்பிக்கையையும் பெறவேண்டும்.**"

—மக்கள் கோபம் மூண்டெழுந்த வேளையில்—பாட்டாளிகளின் பட்டாளம் அரண்மனைக் கதவுகளைத் தட்டிநின்ற நேரத்தில்—கோபுரத்துப் பொம்மைகளென கொலு வீற்றிருக்கும் கோமகன்களின் கோலாகலங்களை இனியும் பொறுக்க மாட்டோம் என்று உழவர் கூட்டம் சூளுரைத்த சமயத்தில்—ஊரெங்கும் நாடெங்கும் பெருங் கொதிப்பு ஏற்ப... மக்கட் கடல் கொந்தளி... தருணத்தில், இந்த வாக்... யங்களை யாரோ ஒருதிவா... வீசியிருக்கக் கூடும் என்... தான் இதைப் படிக்... எவரும் எண்ணுவர். ஆனு... இச் சொற்களைத் தூவியது... திவான் அல்ல; மகாத்ம... வின் வலது கரம்!

பொறுப்பாட்சிப் போர... ட்டம் எழுந்தவேளையில் ச... வோத்தம சர். சி. பி. இ... இதோபதேசத்தைச் செ... திருந்தால் வியப்பதற்கொ... ன்றுமில்லை. அலைகடலெ... எழுந்த எதிர்ப்பு கண்... அஞ்சி நடுங்கி சர். ஆற்கா... இராமசாமி இதைச் சொ... லியிருந்தாலும் இது சகஜ... என்று சொல்லிவிடலா... அவர் திவான் பீடத்தை... அலங்கரிக்கும் காரண... தால். வேறு எந்த சமஸ்... னத்தைச் சேர்ந்த எந்... திவான் இப்படிச் சொல்... யிருந்தாலும் மன்னர்களி... புன்னகையைப் பெற... பொருட்டுச் சொன்னத... என்று எண்ணி அமை... யுறலாம். ஆனுல் இப்போ... இவ்வண்ணம் சொன்... வரோ அண்ணல் மகாத்ம... வின் அற்புதமான சிஷ்ய... அவருடைய அன்பை மு... அளவுக்குப் பெற்ற பு... ணிய சீலர்; வன்மை பை... த்த தீரர் என்று தேசி... வட்டாரம் கூறும் வீர பு... ஷர்; ஆம்! சர்தார் படே...

பிரிட்டிஷ் சர்க்காரி... செல்லப் பிள்ளை அல்... கோமாளி வேந்தர்களி... குல்லூக பட்டர் அல்... "பிற்போக்குக் கட்சி... களின் பிற்போக்குத் த... வர் அல்ல, பத்தாம் பச... களின் சட்டாம் பிள்...

◆◆◆◆◆◆◆◆

# பெரியார் கட்டளை

★

ஆங்காங்குள்ள திராவிடர் கழகங்கள் இந்த ஆண்டுக்கு உறுப்பினர்கள் சேர்க்கும் வேலையை உடனே துவக்கி பெருவாரியாகப் புது உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுமென்றும் பழைய உறுப்பினர்களிடமும் இவ்வாண்டு சந்தாத் தொகையை வசூலிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். உறுப்பினர் சேர்க்கும் புத்தகம் வேண்டுவோர், "விடுதலை" நிலையத்திற்கு எழுதவும்.

—ஈ. வெ. ரா.

◆◆◆◆◆◆◆◆

ல்; இந்த வாசகங்களைத்
வர் சர்தார் படேல்.
ரோ தேசீய இயக்கத்
தலைமைத் தூண்!
சமஸ்தானாதிபதிகளைத்
ாதே! அவர்கள்மீது
ு சொல்லாதே! ஏன்
று எதிர்த்து உறு
த!ஆட்சி எமக்கென்று
காதே! கப்சிப்! கபர்
!"—கேட்டதுண்டு இவ்
கங்களை நெடுங்காலத்
த முன்னமேயே.
ல் அன்றெல்லாம்
ன்னவர்கள் ஏகாதிபத்
தாசர்கள். இன்றும்
த குரல் கேட்கிறது
திபத்திய தாசர்களிட
தல்ல—சர்தார் படே
மிருந்து! அவர் ஏகாதி
ிய தாசரல்ல. ஏகாதி
ியத்தை எதிர்த்துப்
ராடிய காங்கிரஸ் கட்சி
தலைமைக் கொறடா.

ிட்டிஷ் ஏகாதிபத்தியம்
லந்ததும், அதன் தயவில்
த்துவந்த இந்திய சமஸ்தா
திகளின் குட்டி ஏகாதி
யங்களும் மரணப் படுக்கை
கிச் செல்வதே முறை.
ாய தேவேந்திரன் அழிந்த
ு மற்ற பல சில்லறைத்
தைகளும் உடன் அழி
நியாயம். பெரிய பெருச்
யே ஓடி ஒளிந்தபோது
ல் ஊட்டி வளர்க்கப்பட்ட
ஞ்சிறு பெருச்சாளிகளும்
தேடிப் பதுங்குவதே
. இந்தியத் துணைக் கண்
ல், பிரிட்டிஷ் ஆட்சியில்
ண்டு கிடந்த மக்கள் விடு
பண் பாடி, வெற்றி
க் கொண்டாடி, ஏகாதிபத்
தை விரட்டியடித்த பின்ன
சிற்றரசர்களின் சிங்கார
ளுக்கு அடங்கி வாழ
டும் சமஸ்தான மக்கள்
எதிர்பார்ப்பது தவறு.

அவர்களுக்கும் விடுதலை ஆர்வம்—தம்மைத் தாம் ஆளும் உரிமையில் வேட்கை—சுதந்தரக் கிளர்ச்சியில் விருப்பம் தோன்றவே செய்யும். அந்த விருப்பம் நிறைவேறுதற்கான உதவிகளைச் செய்வதே இந்தியத் துணைக் கண்டத்தைச் சேர்ந்த நம் கடமை. விடுதலை பெற்று, "சொந்த ஆட்சி"யில் வாழும் நாம், இதைச் செய்வோம் என்றே சமஸ்தானங்களில் உள்ள மக்களும் எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய நிலையில், "மக்களே! போர் தொடுக்க வேண்டாம்! மன்னர்களும் நம்மவரே" என்று சர்தார் படேல் கூறுவதை அந்த மக்கள் கேட்டால் என்ன நினைப்பர் நம்மைப்பற்றி? மன்னர்களின் தடியடி தர்பார் கண்டு அஞ்சாது, அவர் தம் ஆணைப்படி பிறக்கும் துப்பாக்கி வேட்டு கண்டு மனம் உடையாது, சமஸ்தானப் போலீஸ் தரும் பரிசு மரணம் என்பதறிந்தும் சளைக்காது, பொறுப்பாட்சிப் போர், பலப்பல "நர பலி"களைப் பெற்ற பிறகே வெற்றி தரும் என்பது தெரிந்த பிறகும் சோர்வு அடையாது, வீரப் போர் விளைக்கும் சமஸ்தான மக்களுக்கு நாம் செய்யும் உதவி—நாம் தரும் பாராட்டு—நாம் காட்டும் நன்றி இதுதானா? பலப்பல மயான காண்டங்களைக் கண்டும் விடுதலைப்போரை மட்டும் நிறுத்தாத அந்த வீரர்களுக்கு நம் உள்ளம் உரைக்கும் சொல் இச்சுடு சொல்தானா? இது நியாயமா? அந்த மக்கள் நெஞ்சு நோகாதா இது கேட்டால்?

**அவர்கள் நம்மவர்கள்!**—பாருக்குத் தருகிறோம் இந்த விசித்திர உபதேசத்தை என்பதை நினைத்துப் பார்த்தாரா சர்தார் படேல்? ஒரு சமுதாயத்தைக் கசக்கிப் பிழியும் கொடுங்கோல் மன்னர்களைப் பற்றி அந்த சமுதாயத்திடமே இப்படிச் சொல்லலாமா? வேதனை வெண்பா அல்லவோ இது அவர்களுக்கு!

எலிகளிடம் சென்று பூனைகளும் நம் இனத்தவரே என்று கூறுவதுபோல, ஆட்டுக்குட்டிகளிடம் சென்று ஓநாய்களை ஏன் வெறுக்கிறீர்கள் என்று கேட்பதுபோல, மான் கூட்டத்திடம் போய் புலிகளை நீங்கள் கெஞ்சிக் கூத்தாடினால் நியாயம் கிடைக்குமே என்று உபதேசம் உரைப்பதுபோல, உழவர்களைக் கண்டு உங்களுக்குக் கதிமோட்சம் மிராசுதாரரின் புன்முறுவலே என்று நவில்வதுபோல, தொழிலாளிகளை மடக்கி முதலாளிகளாலேயே நீங்கள் நலன் பெறமுடியும் என்று அன்பு மொழி பகர்வதுபோல சர்தார் படேல் சமஸ்தான மக்களுக்குச் சொல்கிறார் மன்னர்களும் நம்மவரே என்று.

அவர்கள் அறிவார்கள், சமஸ்தானாதிபதிகளைப் பற்றி! படேலைவிட மிக நன்றாக அறிவார்கள்! அவர்கள் உடலில் உள்ள தழும்புகள் ஒவ்வொன்றும் பேச வாயிருந்தால் கதை கதையாய்ச் சொல்லும் மன்னாதி மன்னர்களின் 'நம்மவர்' தன்மையைப் பற்றி. பூனைகளால் எலிகளுக்கு நன்மை கிடைக்குமா தீமை விளையுமா என்பது பற்றி படேலைக் கேட்டுத் தெரிய வேண்டிய நிலையில் இல்லை அவர்கள்.

**அவர்களுக்குத் தேவையில்லை படேலிசம். அவர்கள் விரும்புவது குடியாட்சி.**

---

போர்வாள்
திராவிடர் வார வெளியீடு
| | உள் நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் ரூ. | 0 1 6 | 0 2 0 |
| ஆண்டு 1-க்கு | 5 0 0 | 6 8 0 |

விவரங்களுக்கு:
போர் வாள்,
பவழக்காரத் தெரு, சென்னை.

# இன்று இருப்பது முதலாளித்வ அமைப்பு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார அமைப்பில் உள்ளவர்கள், அந்த அமைப்புக்குள்ளாகவே உள்ள நாடுகளில், ஒன்று இன்னொன்றைச் சுரண்டுகிறது என்று சொன்னால், ஒரு நாட்டு முதலாளித்வம் மற்ற நாட்டைச் சுரண்டுகிறது என்றுதான் பொருள். ஆனால் உலகம் முழுவதும் சமதர்மப் பொருளாதார முறை (Socialist Economy) ஏற்பட்டு விட்ட பிறகு, ஒரு நாடு மற்றொரு நாட்டைச் சுரண்டுகிறதுஎன்று சொன்னால், அப்போது, அந்த நாட்டுப் பாட்டாளிகளை சுரண்டுகிறார்கள் என்று அர்த்தம் (ஏன் எனில் அப்போது முதலாளிகளே கிடையாது அல்லவா? எல்லோரும் பாட்டாளிகள் அல்லவா? ஆகையால்தான்.)

ஆகவே, வடநாடு தென்னாடு இரு நாடுகளிலும் சமதர்ம ஆட்சி இருந்து கம்யூனிஸ்ட் நண்பர் இப்படிச் சொல்லி இருந்தால் தவறில்லை. ஆனால் முதலாளித்வ பொருளாதார முறை (Capitalist Economy) இரண்டு இடங்களிலும் உள்ள இப்போது சொல்வது சரியல்ல.

இது பொருளாதார அரிச்சுவடி. இதனைக் கம்யூனிஸ்ட் நண்பர் மறந்திருக்கக் கூடும், பெரிய பெரிய பிரச்சினைகளில் ஈடுபட்டுள்ள காரணத்தால். ஆகவே இதனை நினைப்பூட்டுகிறேன்.

இனம் வேறு. சுரண்டும் குழு வேறு. சரி, அதனால்........? திராவிட நாட்டுப் பிரிவினை தேவை இல்லை என்று அர்த்தமா? அப்படித்தான் அர்த்தமென்றால், "ஆங்கிலேயனே....வெளியே போ" என்று நாம் சொல்லியிருக்கத் தேவையில்லையே! ஆங்கில நாட்டு முதலாளிகளும் அவர்களைச் சார்ந்த ஏகாதிபத்திய வாதிகளும்தானே நம்மைச் சுரண்டினார்கள்! அங்குள்ள பாட்டாளிகள் நம்மைச் சுரண்டவில்லையே!

இல்லை இல்லை, ஆங்கிலப் பாட்டாளிகள் நம்மைச் சுரண்டவில்லை என்றாலும்கூட ஒரு நாட்டவர் மற்றொரு நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்துவது தவறு— ஆகவே, ஆங்கில இனத்தவர் வெளியேறியதே நேர்மை என்றால், அதே காரணத்தால், வடநாட்டவரும் இங்கிருந்து வெளியேறுவதுதானே நேர்மை.

நீதி ஆளுக்கு ஆள் மாறுதல்லவா? தருமம், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு ஒரு வகையாகவும் வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு ஒரு வகையாகவும் இருக்காதல்லவா? ஆகவே எந்தெந்தக் காரணங்களை முன்னிட்டு ஆங்கில ஆட்சி இந்தியாவை விட்டு விலகவேண்டும் என்றோமோ, அதே காரணங்களை முன்னிட்டுதான், வட நாட்டு கிரகணம் தென்னாட்டை விட்டு அகல வேண்டும் என்கிறோம். முன்னது தவறு என்று யாரும் சொல்ல மாட்டார்கள், ஆகவே பின்னதும் தவறன்று. சூழ்நிலையின் காரணமாகவோ கட்சிக் கண்ணாடி அணிந்திருப்பதனாலோ இன்ன பிற காரணங்களாலோ யாரேனும் தவறு என்று கூறக்கூடுமே தவிர உண்மையில் தவறு அல்ல.

கம்யூனிஸ்டு நண்பர் மேலும் கூறுகிறார் கேரளத்திலும் மதுரையிலும் உள்ள பஞ்சாலைத் தொழிலாளியோ, தஞ்சை உழவனோ, திருச்சி ரயில்வே ஊழியனோ அவதியுறுவதற்குக் காரணம் வடநாட்டுச் சுரண்டலே என்று. உள்ள படியே இந்த இடங்களிலெல்லாம் திரா

விட இனத்தைச் சேர்ந்த மு
லாளிகள் சுரண்டல் இயந்திர
தின் நிர்மாண கர்த்தாக்கள
உள்ளனர் என்பதையோ, தி
விடப் பாட்டாளிகள் இ
முதலாளிகளின் இரும்புப்பி
யில் அகப்பட்டு இன்னலுற்
வதைகின்றனர் என்பதைய
நானோ திராவிடர் கழகமே
எந்த நாளும் மறுத்ததில்
திராவிடர் கழகம் பாட்டா
களின் மேடை. அதிலே ராஜ
சர்களோ, அழகப்பாக்களோ
வடபாதி மங்கலங்களோ, ச
ஆர். கே. சண்முகங்களோ கிடை
யாது. மிட்டா மிராசுகளுக்கு
திராவிடர் கழகத்தில் திரண்
குழுமியுள்ள அன்னக் காவ
களுக்கும் தொலை தூரம், ஜமீ
ஜாகீர்தார்கள் திராவிடர் கழக
தைத் தங்கள் பிறவிப் பகை
ரென எண்ணுகின்றனர். தெ
னாட்டில் உள்ள குட்டிக் குபே
களோ திராவிடர் கழகம் பா
கிறது என்றாலே விஷ வாயு
வீசுகிறது என்று எண்ணுப
கள். உண்மையிலேயே தி
விடர் கழகம் விஷ வாடைதா
அவர்களுக்கு. தென்னாட்டி
உள்ள முதலாளித்வம் தொ
யத்தான் வேண்டும். தொலை
கத்தான் பாடுபடுகிறது திராவிட
கழகம். ஆனால் உள்நாட்டு மு
லாளித்வத்தைத் தொலைக்கு
முயற்சியில் முனைந்துள்ள கா
ணத்தால் வெளிநாட்டு (வ
நாட்டு) முதலாளித்வத்திற்கு
"ததாஸ்து" கூறும் தார
மனப்போக்கு திராவிடர் கழ
திற்குக் கிடையாது என்ப
மட்டும் நான் மனப்பூர்வம
ஒப்புக்கொள்கிறேன்.

உள் நாட்டு முதலாளிகளிட
சிக்கும் பொருளை ஒரே சட்ட
தின் மூலம், ஒரு மரண
மூலம், ஒரு சில திட்டங்க

# திராவிடத்தில் யாரும் யாரையும் சுரண்ட முடியாது

லம் மீட்டுவிட முடியும். நாளை வறினும் அடுத்த நாள் தைச் செய்வது எளிது. சய்துவிடலாம். ஆனால் வெளி ட்டுக்குப் போய்விட்ட ணத்தை எப்படி நாம் மீட்க டியும்? அழகப்பாக்களிடம் ள்ள பொருளை, திராவிட அர ாங்கம், ஏதேனும் ஒரு வரியின் பயரைச் சொல்லி சட்ட பூர்வ ான முறையில் ஒரே நாளில் ன்பரல் சேர்த்துக்கொள்ள டியும். ஆனால் திராவிட ல்லையைத் தாண்டி உள்ள ர்லாவிடம் போய்விட்ட பாருளை நாளை திராவிட அரசு ீட்க முடியுமா? இந்த ஒரு ாரணத்தால்தான் உள்நாட்டு தலாளித்வத்தை ஒழிப்பது ரு விநாடி பொறுத்து என்றால் டநாட்டு முதலாளித்வத்தை ரு விநாடி முன்னாலேயே ழித்துவிட வேண்டும் என் றது திராவிடர் கழகம். இதில் ன்ன தவறு?

7. தென்னாட்டில் மற்ற இனங் ளைக் காட்டிலும் தமிழ் இனமே டுதலாக வளர்ந்துள்ளது. இந் லையில் தென்னிந்தியக் கூட்டாட்சி அமைவது தமிழ் முதலாளித்வத் டம் தெலுங்கு முதலிய பிற இனங் ளைக் காவு கொடுப்பதற்கே ப்பாகும்.

நண்பர் ஏதேதோ வாதங்களை ழுப்பி எழுப்பிப் பார்த்தும் லன் இல்லாது போகவே இந்த "தமிழன்—தெலுங்கன்" பிரச்சினையைக் கிளப்பி யிருக் கிறார் கடைசியாக. இதுவரை அவர் தீட்டிய சொல்லோவியங் கள் அத்தனைக்கும் முடிசூட்டு வதுபோன்றது இந்த வாசகம்.

திராவிடக் கூட்டாட்சி அமைந் தால், தமிழ் இன முதலாளிகளே அந்துப் பலசாலிகளாக இருப் பர், எனவே பிற இனங்கள் இவர்கள் பசிக்கு இரையாகி விடும் என்று அஞ்சுகிற கம்யூ னிஸ்டு தோழர் இதோ உள்ள வாசகங்களையும் படிக்கட்டும்:—

"திராவிட அரசில் தமிழர் நிலை எதுவாயிருக்கும் என்பதை நினைக்கின்றபோது நமது நெஞ்சு திடுக்கிடுகின்றது. திராவிடநாடு உருவாகுமானால் அதன் மக்கள் தொகை சுமார் எட்டு கோடி ஆகும். அதில் தமிழர்கள் மூன்று கோடிக்கும் குறை வாகவே இருப்பர்....அந்த நிலை யில் தமிழர் நிலை ஆந்திரன் நல் லெண்ணத்திற்கு அடிபணிந்து நிற்பதைத் தவிர வேறு எதுவா யிருக்க முடியும்?"

—இது ம. பொ. சிவஞானம் கூறுவது.

திராவிடக் கூட்டாட்சி அமை வது தமிழ் இனத்தை தெலுங்கு இனத்திடம் காவு கொடுப்பதா கும் என்கிறார் ம. பொ. சிவ ஞானம். அல்ல! தமிழ் இனத்தி டம் (அதில் உள்ள முதலாளி களிடம்) தெலுங்கு முதலிய இனங்களைக் காவு கொடுப்ப தாகும் என்கிறார் கம்யூனிஸ்ட் நண்பர். எவ்வளவு முரண் பட்ட கருத்துக்கள்! அதுவும் ஒரே திராவிடநாட்டுப் பிரச்சினை பற்றி!

நண்பர் சிவஞானம் கூறுவது சரியா, தோழர் கம்யூனிஸ்ட் கூறுவது சரியா? இரண்டில் எது உண்மை? இரண்டும் அல்ல. உண்மை, சிவஞானம் சொல்லி லும் இல்லை; கம்யூனிஸ்ட் கருத்திலும் இல்லை; திராடக் கழகத்திடம் இருக்கிறது. திரா விடக் கூட்டாட்சியில் தமிழர் தெலுங்கரையோ தெலுங்கர் தமிழரையோ சுரண்ட முடி யாது. சுரண்டும் வண்ணப்

நியூ ★ ஜஸ்டிஸ்

ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர்: A. S. வேணு.

சிறந்த அரசியல் கட்டுரைகள், ஆணித்தரமான கண்டனங்கள், விஞ்ஞானக் குறிப்புகள், புரட்சித் தலைவர்களின் வரலாறுகள் அனைத்தும் அடங்கியது.

தனி இதழ் அணா 2, ஆண்டுத் தொகை 6-0-0, அரை ஆண்டுக்கு 3-0-0.

"நியூ ஜஸ்டிஸ்" நிலையம், 193, தங்கசாலை — சென்னை.

கூட்டாட்சியின் அமைப்பு முறை (Consitution) இருக்காது. மெய்யாகவோ பொய்யாகவோ திராவிட இனக் கிளைகளில் ஒன்று மற்றொன்றைச் சுரண்டுகிற எண்ணம் எழுமானால் சுரண்டப்பட்ட இனம் திராவிடக் கூட்டாட்சியை விட்டு வெளியேறி விடலாம். கூட்டாட்சியில் உள்ள நால் வகை நாட்டினரில்எவரும் எப்போதும் கூட்டாட்சியை விட்டு விலகிச் செல்லும் உரிமை உடையவரே.

ஒரு நாடும் ஒரு கூட்ட மக்களும் அவர்களின்விருப்பத்திற்கு மாறாக, இன்று இந்திய யூனியனில் திராவிடம் இழுத்து நிறுத்தப்பட்டிருப்பதுபோல, வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்படும் போதுதான் சுரண்டல் பிரச்சினையே எழுகிறது. அப்படியின்றி நாம் குறிப்பிடும் கூட்டாட்சியில் இருப்பதுபோல தமிழகமோ ஆந்திரமோ மலையாளமோ கன்னடமோ பிரிந்து செல்லும் முழு உரிமையுடன் திகழுமாயின், அங்கு சுரண்டல் பிரச்சினை எழுவதற்கே மார்க்கம் இல்லை.

(தொடரும்)

# விற்பனையாளர்கள் தேவை.

சேலம், செங்கற்பட்டு, திருவத்திபுரம் (வ. ஆ.) விற்பனையாளர்கள் இல்லாத மற்ற ஊர்கள் — இவ்விடங்கட்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை.

## விற்பனையாளர்கட்கு !

சில விற்பனையாளர்கள் சென்ற வாரம் அனுப்பிய பில்படி தொகையை இன்னும் அனுப்பாமல் உள்ளனர். வரும் வியாழக்கிழமைக்குள் அலுவலகத்திற்கு வந்து சேரும்படி தொகையை அனுப்பித் தராதவர்கட்கு அடுத்த வாரம் முதல் பத்திரிகை கண்டிப்பாக நிறுத்தப்படும்.

அலுவலாளர்,
"போர்வாள்"


ஈரோட்டுப் பாதை

ஆசிரியர் :
மா. இளஞ்செழியன்
(B. A. Hons.)

[தமிழ் நாட்டிலே வீசிய பெரும் புயல் சுயமரியாதை இயக்கம்; புயல் வீசிய விதத்தைக் கூறுவது இந் நூல்.]

விலை அணா 8 அழகிய பதிப்பு

தனிப் பிரதி வேண்டுவோர் 9 அணா தபால் தலை அனுப்பவும்.

வியாபாரிகளுக்கு 20 பெர்ஸெண்ட் கழிவுண்டு.

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு,
சென்னை-1.


(12-ம் பக்கத் தொடர்
பாதிப்பதாயிருப்பதே இ
வெறுப்புக்கு அடிப்படைக்
ணம். இதே காரணத்
காட்டித்தான் இங்கும் கா
பனை வரியா—வேண்டாம்
எடுத்து எறி என்கிறோம்

"மதுவிலக்குச் செய்தி
றோம் மொத்தம் பதினா
லாக்களில்—ஆகவே பண
எனவேதான் வரி விதிக்கிறே
என்று சொல்கிறது அரசா
வரி விதிக்கட்டும், தாரா
விதிக்கட்டும் ஆனால் விதி
படும் வரி விற்பனை வ
இருக்க வேண்டாம். ம
வரியாக, அமிதலாப வரி
வார்சுதாரர் வரியாக, இன்
ஏறு வரிசை வரிகளாக இ
கட்டும்.

ஓர் அரசியலார் தம் வரு
னத்தைப் பெருக்கிக்கொ
தற்கு வரி விதிப்பு ஒன்று
வழி என்பதில்லை. வேறு
களும் உண்டு. எடுத்துக்
டாக, கொழுத்த வரு
தரும் பஞ்சாலைகளை அ
லாரே எடுத்து நடத்த
சர்க்கரை ஆலைகள், கண்
தொழிற்சாலைகள், கப்பல்
டும் கம்பெனிகள், பஸ்
லான போக்குவரத்துக்
கள் இவற்றை எல்லாம்
சாங்கம் தன் உடைமை ஆ
கொள்ளலாம். பொது உ
மைத் திட்டத்தை எவ்வள
கெவ்வளவு சர்க்கார் கை
கின்றனரோ அவ்வளவுக்கு
வளவு சர்க்கார் வருமானம்
கப்படும்.

சர்க்கார் இவற்றில் ஏதே
ஒன்றை, அல்லது பலவற்
அல்லது அனைத்தையும்
ளட்டும்; ஆனால் விற்பனை
அதுமட்டும் வேண்டாம்.

# ...ன்று ! ஆனல் ஒன்று !

பா நூறுயிரம் கேட்டார்
் அமைச்சர் அவினுசிலிங்க
கிடைத்தது தொகை.
டங்கிவிட்டார் பணியை —
ழ்க் களஞ்சியப் பணியை.
மிழ்க் களஞ்சியம் திரட்டும்
ற்சி பெரிது. அறிவுக் கடல்
மக்கும் அரிய செயல் அது.
ன யாவரும் வரவேற்பர்.
வேற்பதே முறை.
ளஞ்சியம், மனித அறிவின்
லக்கோடு இது என்பதைச்
டிக்காட்டும் ஓர் முயற்சி.
ரிடம் என்னும் ஓர் ஆதிப்
் தோன்றிய நாள்தொட்டு
றுவரை அது தந்த அறிவுக்
்களின் தொகுப்பு, களஞ்சி
விண், விமானம், கடல்,
், விலங்கு, அதை மேய்க்
மனிதன், அவனை வீழ்த்
அணுக்குண்டு, அம்பு,
ிகலம், அது செய்யும்
ற, முறை வந்த விதம்,
டை வண்டி, கப்பல், கதிரி,
ஸ்ரே, விஞ்ஞானம், வர
ு, கவிதை, உரைநடை,
க்கியம், சிற்பம், தத்துவம்
று உலகிலே என்னென்ன
ருளுண்டோ அத்தனை
ியும் அறிவிக்கும் ஆசான்
. எல்லாப் பொருளும்
ன் கண் உள—இதன் கண்
லாப் பொருள் ஏதும் இல்லை
னும் மொழிக்கு ஓர் இலக்
ாக இருக்கத் தக்கதும்
. ஆயிரமாயிரம் ஆண்டுக
மக்கள் உள்ளத்தில்
ன்றி வளர்ந்த எண்ணங்
ும் ஏற்பாடுகளும் அவற்றின்
ாவுகளும் அவ்வப்போது
காங்கு தோன்றிய மறு
்ச்சி இயக்கங்களும் பிறவும்
ல் இடம் பெறும். அறிவுக்
ூலம் எனலாம் அதனை.
த்தனையோ நூற்றுண்டுக
எத்தனையோ மக்களால்

காணப்பட்ட உண்மைகளையும், போற்றப்பட்ட கலைகளையும், எழுதப்பட்ட இலக்கியங்களையும், வகுக்கப்பட்ட பாதைகளையும், திரட்டப்பட்ட தத்துவங்களையும் ஒன்று திரட்டி ஒரு நூலில் தருவதாயின் அது அரியதோர் முயற்சி என்பதை எவரும் ஒப்புவர்.

இந்த முயற்சியில் ஈடுபட்ட அன்பர் அவினுசிலிங்கனுர் வேண்டியவாறு ரூபா நூறுயிரம் சேர்ந்துவிட்டதால், தமிழ்க் களஞ்சியப் பணியின் தொடக்க விழா அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. துணை வேந்தர் டாக்டர் லட்சுமணசாமியின் தலைமையில் தோழர் திரிகூடசுந்தரனுர் பணியைத் துவக்கி வைத்தார். கூட்டத்திற்கு டி. எஸ். எஸ். இராஜன், கோபால ரெட்டி, காளா வெங்கட்ராவ் போன்ற அமைச்சர்களும் பிறரும் வந்திருந்தனர். கல்வி அமைச்சர் பேசினர்.

தொடுத்துள்ள பணி மிகச் சிறந்தது. தமிழர் அனைவராலும் போற்றற்குரியது. ஆனல் ஒன்று. தமிழில் அறிவுக் களஞ்சியம் திரட்டும் இச் சீரிய முயற்சியில் தமிழறிவும் பொதுக் கலை அறிவும் படைத்த பெருமக்கள் இடம் பெறல் வேண்டும். தமிழகத்தின் தலைமைப் புலவர் மறைமலை அடிகளார், பேராசிரியர் நாவலர் சோமசுந்தர பாரதியார், பல கலைகளும் ஆய்ந்து கண்ட அறிஞர் திரு. வி. க., சேலம் கல்லூரித் தலைவர் ஏ. இராமசாமிக் கவுண்டர் போன்றவர்கள் களஞ்சிய அமைப்புக் குழுவில் தலைமை இடம் பெற வேண்டும். பாரதியாரும் மறைமலையாரும் திரு. வி. க. வும் எந்தக் காரணத்தை முன்னிட்டாவது சேர்க்கப்படாமல் அந்தக் குழு அமைக்கப்படுமாயின் அதைவிட மானக்கேடு தமிழகத்திற்கு வேறு இருக்க முடியாது. தமிழ் எனில் அது பற்றி அதிகார பூர்வமாகப் பேசக்கூடியவர்கள் இவர்களே. இவர்கள் ஒப்புதல் இன்றி, இவர்களுடைய அறிவுத் துணை இன்றி தமிழ்க் களஞ்சியம் தயாராவதைவிட அம் முயற்சியை அடியோடு விட்டுவிடுவது நல்லது.

தமிழ்ப் பகைவர்களையும், தமிழினும் வடமொழியே சிறந்தது என்று சாதிக்கும் சில ஓட்டாஞ் சல்லிகளையும், தமிழ்ச் சொற்களை எல்லாம் வட சொற்கள் என்று சந்தையில் ஏலம்கூறும் வஞ்சகப் புல்லர்களையும், உதட்டளவில் தமிழ் வாழ்த்தும் உள்ளத்தில் தமிழ் வெறுப்பும் படைத்த நயவஞ்சக நரிகளையும், பொதுவாழ்க்கைத் தொண்டு இது என்பதையும் மறந்து அகப்பட்டதைச் சுருட்டடா ஆண்டியப்பா என்று கூறும் "தாராள நோக்கம்" படைத்த கனதனவான்களையும், எங்கெங்கே இத்தகைய நல்ல முயற்சிகள் நடமாடுகின்றனவோ அங்கெல்லாம் புகுந்து தம் கடை விரித்து விரித்து சொந்த வாணிபம் செய்ய வரும் மைலாப்பூர் திருவல்லிக்கேணி மாம்பலத்துப் பழம் பஞ்சாங்கங்களையும், அவர் அனைய உருத்திராட்சப் பூனைகளையும் இந்த நன் முயற்சியில் நுழையாதவாறு விரட்டி அடிக்க வேண்டும். நல்ல தமிழ்ப் பற்றும் தமிழ்க் கலை ஆர்வமும் படைத்த தமிழ் அறிஞர்களைக்கொண்டு—தமிழர்களைக் கொண்டு இம் முயற்சி நடைபெறல் வேண்டும். அப்படி நடைபெறல் இயலாதாயின், இம் முயற்சி உடனடியாக அழிந்துபடுதல் வேண்டும். தமிழ்க் களஞ்சியம் பற்றிய நம்முடைய வெளிப் படையான எண்ணம் இதுவே.

# விற்பனை வரி—எடுத்து எறி

• சென்னை அரசாங்கம் மறுபடியும்ஒரு முறை விற்பனை வரியை உயர்த்துவதென்று முடிவுகட்டி விட்டது. இது மிகவும் தவறான முடிவு.

விற்பனை வரி பெரும்பாலும் ஏழைகளைத் தாக்கும் இயல்புடையது. அரசாங்கத்திற்கு விற்பனை வரியை செலுத்துபவர்கள் வணிகர்களே என்றாலும் உண்மையில் வரியைக் கட்டுபவர்கள் பண்டங்களைப் பணங் கொடுத்து வாங்கும் பாட்டாளிகளே. ஏனெனில் அரசாங்கம் தன் மீது விதிக்கும் வரியை, வணிகன், பண்டம் பெறுவோர் மீது வெளிப்படையாகவே சுமத்தி விடுகிறான். பண்டத்தின் விலை இவ்வளவு என்பதைக் குறித்து, அதற்கு விற்பனை வரி இவ்வளவு என்பதையும் தனியாகக் குறித்து, இரண்டையும் கூட்டி, ஆகமொத்தம் இவ்வளவு என்று சொல்கிறான் வணிகன். இது தவறு என்று சட்டம் சொல்லவுமில்லை. எனவே வரி, வணிகர் மீது அல்ல—பண்டம் பெறுபவர்மீது என்பது தெளிவு.

வரிகளில் இரண்டு வகை உண்டு-ஏறுவரிசை வரி, இறங்கு வரிசை வரி என்பன. இவற்றில் ஏறுவரிசை வரி (progressive tax) பணக்காரர்களைத் தாக்குவது. இறங்குவரிசை வரி (Regressive tax) ஏழைகளைத் தாக்குவது. விற்பனை வரி, பின் குறித்த வரிசையைச் சேர்ந்தது, ஆகவே ஏழைகளை—பாடுபடும் பாட்டாளிகளைத் தாக்குவது.

அரசாங்கத்திற்குப் பண நெருக்கடி என்றால் அது நீங்க எத்தனையோ வழிகளுண்டு. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவனும், இரண்டொரு ஏக்கர் நிலம் உடையவனும் ஒரே விதமான நிலவரியே இன்று செலுத்துகின்றனர். இது மாறி, ஐந்து ஏக்கர் வரை நிலம் உடையவர்கட்கு வரியே இல்லாதபடி செய்து விட்டு, (ஏனெனில் அவன் உழுது பயிரிட்டுப் பெறும் ஊதியம் அவனும் அவன் குடும்பமும் வயிறார உண்பதற்குத்தான் போதும்) ஐந்துக்குமேல் ஐம்பதுவரை உடையவர்கட்கு ஒரு வரி விகிதமும், ஐம்பதுக்குமேல் ஐநூறுவரை உள்ளவர்கட்கு அதைவிட அதிக வரி விதிப்பு முறையும், அதற்குமேல் நிலம் உடையவர்கட்கு அதைவிடக் கூடுதலான வரி விதிப்பு முறையும், இப்படியே படிப்படியாக அதிக நிலம் உடையவர்கட்குப் படிப்படியாக அதிக வரி விகிதமும் விதிக்கப்படவேண்டும். உதாரணமாக 5 முதல் 50 ஏக்கர் வரை உள்ளவர்கட்கு ஏக்கருக்கு 5 ரூபா வீதம் நிலவரி இருந்தால், 50 முதல் 500 ஏகர் வரை உள்ளவர்கட்கு ஏக்கருக்கு 15 ரூபா வீதம் நிலவரி இருக்க வேண்டும். 500 முதல் 3000 ஏக்கர் வரை இருப்பவர்கட்கு 20 ரூபா இருக்கவேண்டும். 2000 முதல் 5000 ஏக்கர் வரை உடையவர்கட்கு வரி விகிதம் ஏக்கருக்கு 30 ரூபா இருக்க வேண்டும். இப்படியே வரி விதிப்பு முறை படிப்படியாக உயர்தல் வேண்டும். நிலவரி முறையை இவ்வண்ணம் சீர்திருத்தி அமைப்பதால் சர்க்காருக்கு அதிகப்படியான பணம் கிடைப்பதுமட்டுமன்றி, ஏழை அழும் கண்ணீர் துடைக்கப்பட்டு, அவரவர்கள் முதுகு சுமக்குமளவு நிலவரிப் பாரம் அவரவர்கள்மீது ஏற்றப்பட
வழி பிறக்கும்.

இந்த ஏறுவரிசை நில
(Progressive Land Ta
மட்டுமன்றி, அரசியலார், பல்
யிரக் கணக்கில் பொருள் ஈட்
வணிக வேந்தர்களிடம் 200
ரூபாய்க்குமேல் அவர்கள் சம்
திக்கும் வருமானத்தி
ரூபாய்க்கு 8 அணா என்ப
போன்ற முறையில் அதி
லாபவரி (Excess Prof
Tax) வசூலிக்கலாம். இவ
சாதிபதிகளும் கோடீசுவர
ளும் பெரும் பணக்காரர்களு
இறந்துபோனதும், அவர்க
சொத்தில் ஒரு பகுதியை மர
வரி (Death Duty) என்
முறையில் அரசியலார் எடுத்து
கொள்ளலாம். சொத்து, வா
சுதாரர்களிடம் மாறும்போது
பெரிய பணக்காரர்கள் சொ
த்தைப் பொறுத்த வரையில்
வார்சு வரி (Succession Dut
என்ற பேரால் வார்சுதாரர்களி
மிருந்து பெருந் தொகையை
வசூல் செய்யலாம். சொத்
நேரடியாகத் தகப்பனிடமிருந்
பெண்ணுக்கோ பிள்ளைக்கோ
வரும்போது, வார்சு வரி குறை
வாகவும் தூர பந்துக்களுக்
வரும்போது அதிகமாகவு
இருக்கும்படி விதிக்கப்படலாம்
வருமான வரி விகிதத்தை
கூட, அதிக வருமானம் உள்
வர்களைப் பொறுத்தவரையி
இன்னும் அதிகப்படுத்தலாம்.

இங்கிலாந்து போன்ற நா
களில இத்தகைய வரிகள் சா
சாதாரணம். இங்கும் இத்
கைய வரிகள் கையாளப்ப
லாம்.

விற்பனை வரி இங்கிலாந்தி
கிடையாது. விற்பனை வரி
அவர்கள் வெறுப்பதுபோ
வேறு எந்த வரியையும் வெறு
பதில்லை. அது பாட்டாளிக

(10-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
at Free Printers, 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon